# மக்கள் கண்காணிப்பகத்தில் சிபிஐ சோதனை நடத்தி உள்ளதற்கு திருமாவளவன் கண்டனம்

2022-01-10@ 11:04:39



சென்னை: மக்கள் கண்காணிப்பகத்தில் சிபிஐ சோதனை நடத்தி உள்ளதற்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் கண்டனம் தெரிவித்துள்ளார். மனித உரிமைகளுக்காக தொடர்ந்து களத்தில் நிற்கும் அமைப்பு மக்கள் கண்காணிப்பகம். சட்டத்தின் வழி எளியோரின் உரிமைகளை பாதுகாத்துவரும் மக்கள் கண்காணிப்பகத்தை ஒன்றிய அரசு அச்சுறுத்தியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.